அதனால் கிடைக்கும் பலன், 1,500 ஏக்கருக்குத்தான். அதனால் பாசன வசதி ஏற்படும். ஆகவே இப்போதுள்ள நிலைக்கு இது கட்டுபடியாகாத திட்டம்.

Electric Train Service

* 48 *Q.*—SRI K. A. MATHIALAGAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any proposal has been made to Southern Railway authorities, or the Railway Ministry for increasing the frequency of Electric Train Service between Madras Beach and Tambaram Stations; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) No such proposal has been made by this Government. Our information is that no such suggestion has been received recently by the Railway Board or the Southern Railway authorities.

திரு. கே. ஏ. மதியழகன்: வளர்ந்து வருகிற சென்னை நகரின் ஜன நெருக்கடியைக் குறைப்பதற்காக ப்ராட் கேஜை அரக்கோணம் வரையிலும் மீட்டர் கேஜை விழுப்புரம் வரையிலும் மின்சாரப்பாதை அமைக்க மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முயல வேண்டும் என்ற சிபார்சை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: முக்கிய கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. முக்கிய கேள்வியில் உள்ளது "ஃப்ரீக்குவன்சியை" அதிகப்படுத்த முடியுமா என்பது. அதற்கு நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் வேண்டுமென்றால் தனி கேள்வி வேண்டும்.

திரு. முனு. ஆதி: வண்டிகள் போதாமைக்குக் காரணம் ஜன நெருக்கடிதான். சில நேரங்களில் ரெயிலில் ஏறும்போது முன்னாலுள்ள "கௌ காச்" லைனைத் தொட்டால் டிரைவர் வண்டி ஓட்டுவதில்லை. அது நான் கண்ட அனுபவம். ஆகவே அதிகப்படி வண்டிகளை வரவழைத்து மூன்று வண்டிகளை இணைத்து அனுப்பினால் நல்லது. அதையாவது இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: பீக் ஹவர்ஸில் பத்து நிமிடங்களுக்கு ஒரு வண்டி ஓடுகிறது. இப்பொழுதுள்ள வசதிகளை வைத்துக்கொண்டு இவ்வளவு அதிகமாகத்தான் வண்டி விடமுடியுமே தவிர இன்னும் அதிகப்படுத்தினால் சரியாக வராது. அதிகமாக வண்டிகளை வரவழைத்து போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கத்தினிடம் இந்த அரசாங்கம் சொல்லும்.